AHMADI TAMIL CHURCH
ST.PAUL'S CHURCH
KUWAIT
PREPARE TO MEET GOD

# பரிசுத்த பவுல் ஆலயம், குவைத்

# அஹமதி தமிழ் திருச்சபை

# " தேவன் தாமே... கண்ணீர் யாவையும் துடைப்பார். "

வெளி 7:17

செய்தி மலர்
2024
மே

இதழ் : 13
மலர் : 20



## சபை ஊழியரின் அன்பு மடல்



# ஒருவரில் ஒருவர் அன்பாய் இருங்கள்

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர, சகோதரிகளே, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு வாழ்த்துக்களையும் ஆசீர்வாதங்களையும் கூறிக்கொள்ளுகிறேன்.

கடந்த ஏப்ரல் மாதம் முழுவதும் கரம் பற்றி நடத்தின நம் தேவன் வரும் மே மாதத்திலும் நம்மை சத்தியத்திற்குள் வழி நடத்துவார். கர்த்தர் தாமே நம் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக.

மே மாதம் என்பது நம்முடைய பிள்ளைகள் உயர் கல்வி பயில முயற்சி எடுக்கும் ஒரு மாதமாகும் அதனால் நம்முடைய பிள்ளைகளுக்காக தனிப்பட்ட ஜெபங்களிலே ஜெபித்துக்கொள்வோம்.

வேதம் கூறுகிறது " தேவ ஆவியை நீங்கள் எதினாலே அறியலாம் என்றால் மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்துவை அறிக்கை பண்ணுகிற எந்த ஆவியும் தேவனால் உண்டாயிருக்கிறது. மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்துவை அறிக்கை பண்ணாத எந்த ஆவியும் தேவனால் உண்டானதல்ல. வருமென்று நீங்கள் கேள்விப்பட்ட அந்தி கிறிஸ்துவினுடைய ஆவி அதுவே. அது இப்பொழுதும் உலகத்தில் இருக்கிறது" என்று (1-யோவா-4:2,3)

ஆம் பிரியமானவர்களே, நாமும் கூட இயேசு கிறிஸ்துவை அறிக்கை பண்ணுகிறவர்களாய் வாழ வேண்டும். நம்முடைய சொல், செயல், சிந்தனை ஆகியவற்றில் இயேசு கிறிஸ்துவை பிரதிபலிக்க வேண்டும்.

## 1. சொல்லின் மூலம்...

ஆதியிலே வார்த்தை இருந்தது அந்த வார்த்தை தேவனிடத்தில் இருந்தது. அந்த வார்த்தை தேவனாயிருந்தது.

 ஆந்த வார்த்தை மாம்சமாகி கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய் நமக்குள்ளே வாசம் பண்ணினார். அவருடைய மகிமையைக் கண்டோம். அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது. (யோவா-1:1,14) ஆதியிலே தேவன் வார்த்தையினாலே உலகத்தையும் அண்ட சராசரங்களையும் உண்டாக்கினார். ஆதி-1 அதிகாரம். இரத்தத்தில் தோய்க்கப்பட்ட வஸ்திரத்தை தரித்திருந்தார். அவருடைய நாமம் தேவனுடைய வார்த்தை என்பதே. (வெளி-13:13)

நம்முடைய தேவன் நல்ல வார்த்தையாக இருக்கிறார். ஆகவே நாமும் பேசுகின்றபொழுது சமாதானமும் கிருபையும் நிறைந்த வார்த்தைகளையே உபயோகிக்க வேண்டும். யாக்கோபு சொல்கிறார் " துதித்தலும், சபித்தலும் ஒரே வாயிலிருந்து புறப்படக்கூடாது. ஒரே ஊற்றுக்கண்ணிலிருந்து தித்திப்பும் கசப்புமான தண்ணீர் சுரக்குமா? அத்திமரம் ஒலிவப்பழங்களையும், திராட்சை செடி அத்திப்பழங்களை கொடுக்குமா? அப்படியே உவர்ப்பான நீர் ஊறுற்று தித்திப்பான ஜலத்தை கொடுக்கமாட்டாது. (யாக்-3:10-12) அப்படி நல்ல வார்த்தைகளை பேசுகின்றபொழுது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை நாம் அறிக்கையிடுகிறோம். அதுவே தேவன் அருளும் பரிசுத்த ஆவியின் கிரியை. இப்படி நல்ல வார்த்தைகளை பேசுவதின் மூலம் இயேசு கிறிஸ்துவை நம்முடைய சரீரத்திலே மகிமைப்படுத்துகிறோம்.

## 2.செயலின் மூலம்...

ஒரு சகோதரனாவது, சகோதரியாவது வஸ்திரமில்லாமலும், அநுதின ஆகாரமில்லாமலும் இருக்கும் போது உங்களில் ஒருவன் அவர்களை நோக்கி நீங்கள் சமாதானத்தோடே போங்கள், குளிர்காய்ந்து பசியாறுங்கள் என்று சொல்லியும் சரீரத்திற்கு வேண்டியவைகளில் அவர்களுக்கு கொடாவிட்டால் பிரயோஜனமென்ன? விசுவாசமானது கிரியைகள் இல்லாதிருந்தால் தன்னிலேதானே செத்ததாயிருக்கும்"(யாக்-2:15-17)

ஆகவே பிரியமானவர்களே நற்செயல்கள் மூலம் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை நாம் அறிக்கை செய்ய வேண்டும். நம்மால் முடிந்த அளவுக்கு தேவையோடிருக்கும் ஜனங்களுக்கு உதவி செய்ய வேண்டும். இயேசு கிறிஸ்துவும் கூட பரலோகத்தில் சிங்காசனத்தில் வீற்றிராமல் மனிதனாக உலகத்திற்கு இறங்கி வந்து இருளில் வாழ்ந்த ஜனங்களுக்கு வெளிச்சத்தை கொடுத்தார். கட்டுகளோடு போராடிக்கொண்டிருந்த மக்களுக்கு விடுதலை கொடுத்தார். ஆறுதல் இல்லாமல் தவித்த மக்களை சந்தித்து அவர்களின் கண்ணீரை துடைத்தார்.

நாமும் கூட நம்மால் ஆன உதவிகளை பிற சகோதரர்களுக்கு செய்கின்றபொழுது அந்த உன்னதமான தேவனை இந்த உலகத்திற்கு அறிவிக்கிறோம். இதுவே தேவன் நமக்கு அருளின பரிசுத்த ஆவியினுடைய அடையாளம்.

3 ஆந்த வார்த்தை மாம்சமாகி கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய் நமக்குள்ளே வாசம் பண்ணினார். அவருடைய மகிமையைக் கண்டோம். அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது. (யோவா-1:1,14) ஆதியிலே தேவன் வார்த்தையினாலே உலகத்தையும் அண்ட சராசரங்களையும் உண்டாக்கினார். ஆதி-1 அதிகாரம். இரத்தத்தில் தோய்க்கப்பட்ட வஸ்திரத்தை தரித்திருந்தார். அவருடைய நாமம் தேவனுடைய வார்த்தை என்பதே. (வெளி-13:13)

நம்முடைய தேவன் நல்ல வார்த்தையாக இருக்கிறார். ஆகவே நாமும் பேசுகின்றபொழுது சமாதானமும் கிருபையும் நிறைந்த வார்த்தைகளையே உபயோகிக்க வேண்டும். யாக்கோபு சொல்கிறார் " துதித்தலும், சபித்தலும் ஒரே வாயிலிருந்து புறப்படக்கூடாது. ஒரே ஊற்றுக்கண்ணிலிருந்து தித்திப்பும் கசப்புமான தண்ணீர் சுரக்குமா? அத்திமரம் ஒலிவப்பழங்களையும், திராட்சை செடி அத்திப்பழங்களை கொடுக்குமா? அப்படியே உவர்ப்பான நீர் ஊறுற்று தித்திப்பான ஜலத்தை கொடுக்கமாட்டாது. (யாக்-3:10-12) அப்படி நல்ல வார்த்தைகளை பேசுகின்றபொழுது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை நாம் அறிக்கையிடுகிறோம். அதுவே தேவன் அருளும் பரிசுத்த ஆவியின் கிரியை. இப்படி நல்ல வார்த்தைகளை பேசுவதின் மூலம் இயேசு கிறிஸ்துவை நம்முடைய சரீரத்திலே மகிமைப்படுத்துகிறோம்.

### 2.செயலின் மூலம்...

ஒரு சகோதரனாவது, சகோதரியாவது வஸ்திரமில்லாமலும், அநுதின ஆகாரமில்லாமலும் இருக்கும் போது உங்களில் ஒருவன் அவர்களை நோக்கி நீங்கள் சமாதானத்தோடே போங்கள், குளிர்காய்ந்து பசியாறுங்கள் என்று சொல்லியும் சரீரத்திற்கு வேண்டியவைகளில் அவர்களுக்கு கொடாவிட்டால் பிரயோஜனமென்ன? விசுவாசமானது கிரியைகள் இல்லாதிருந்தால் தன்னிலேதானே செத்ததாயிருக்கும்"(யாக்-2:15-17)

ஆகவே பிரியமானவர்களே நற்செயல்கள் மூலம் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை நாம் அறிக்கை செய்ய வேண்டும். நம்மால் முடிந்த அளவுக்கு தேவையோடிருக்கும் ஜனங்களுக்கு உதவி செய்ய வேண்டும். இயேசு கிறிஸ்துவும் கூட பரலோகத்தில் சிங்காசனத்தில் வீற்றிராமல் மனிதனாக உலகத்திற்கு இறங்கி வந்து இருளில் வாழ்ந்த ஜனங்களுக்கு வெளிச்சத்தை கொடுத்தார். கட்டுகளோடு போராடிக்கொண்டிருந்த மக்களுக்கு விடுதலை கொடுத்தார். ஆறுதல் இல்லாமல் தவித்த மக்களை சந்தித்து அவர்களின் கண்ணீரை துடைத்தார்.

நாமும் கூட நம்மால் ஆன உதவிகளை பிற சகோதரர்களுக்கு செய்கின்றபொழுது அந்த உன்னதமான தேவனை இந்த உலகத்திற்கு அறிவிக்கிறோம். இதுவே தேவன் நமக்கு அருளின பரிசுத்த ஆவியினுடைய அடையாளம்.

நன்மை செய்யும்படி உனக்கு திராணியிருக்கும்பொழுது அதைச் செய்யத் தக்கவர்களுக்கு செய்யாமல் இராதே.(நீதி-3:27)

### 3.சிந்தனை மூலம்...

ஒருவன் இவ்வுலக ஆஸ்தியுடையவனாயிருந்து தன் சகோதரனுக்கு குறைச்சல் உன்டென்று கண்டு தன் இருதயத்தை அவனுக்கு அடைத்துக்கொண்டால் அவனுக்குள் தேவ அன்பு நிலைகொள்ளுகிறது எப்படி? என் பிள்ளைகளே வசனத்தினாலும் நாவினாலும் அல்ல கிரியையினாலும் உண்மையினாலும் அன்பு கூரக்கடவோம். இதினாலே நாம் நம்மை சத்தியத்திற்குரியவர்கள் என்று அறிந்து நம்முடைய இருதயத்தை அவருக்கு முன்பாக நிச்சயப்படுத்திக்கொள்ளலாம். நாம் இயேசுகிறிஸ்துவின் நாமத்தின் மேல் விசுவாசமாயிருந்து அவர் நமக்கு கட்டளையிட்டபடி ஒருவரில் ஒருவர் அன்பாய் இருக்க வேண்டுமென்பதே அவருடைய கற்பனையாயிருக்கிறது. (1-யோவா-3:16-23)

இயேசு கிறிஸ்து தம்முடைய ஜீவனை நமக்காக கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம். நாமும் சகோதரருக்காக ஜீவனைக் கொடுக்க கடனாளிகளாயிருக்கிறோம். (1-யோவா-3:16)அவனவன் தனக்கானவைகளல்ல பிறனுக்கானவைகளையும் நோக்குவானாக. கிறிஸ்து இயேசுவில் இருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது. இயேசு கிறிஸ்து தேவனுடைய ரூபமாயிருந்தும் தேவனுக்கு சமமாயிருப்பதை கொள்ளையாடின பொருளாக எண்ணாமல் தம்மைத்தாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்து மனுஷசாயலானார். அவர் மனுஷ ரூபமாய் காணப்பட்டு மரணபரியந்தம் அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி தம்மைத் தாமே தாழ்த்தினார். (பிலி-2:4-8)

நாமும் கூட ஒருவர் மேல் ஒருவர் உண்மையாய் அன்பு கூர்ந்து உதவிகளை செய்கின்றபொழுது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அறிக்கை செய்கிறோம். ஆகவே நம்முடைய சொல் செயல் சிந்தனை மூலம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை நம் வாழ்க்கையில் அறிவிக்கிறவர்களாய் வாழ ஆண்டவர் நமக்கு துணை புரிவாராக.

கர்த்தருடைய கிருபை வரும் மே மாதம் முழுவதும் உங்களைத் தாங்கி ஏந்தி சுமந்து தப்புவித்து வழி நடத்துவதாக.

கர்த்தருடைய பணியில்,
அன்பு சகோதரன்,
S.ஸ்டாலின்

# தேவ செய்தி

கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர சகோதரிகளுக்கு கிறிஸ்து இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். சபையின் மூலம் என்னை அழைத்து ஊழியத்தில் பயன்படுத்திய சபையின் செயற்குழு மற்றும் சபையோருக்கு நன்றி சொல்கிறேன். பலவித தேவைகளோடு இருக்கும் சபையோருக்கு தேவன் கொடுக்கும் வாக்குத்தத்தம் "உங்களைபரிசுத்தம் பண்ணிக்கொள்ளுங்கள். நாளைக்கு கர்த்தர் உங்கள் நடுவில் அற்புதங்களை செய்வார்"(யோசுவா-3:5)

யாத் -3:7,8 இஸ்ரவேலரை எகிப்திலிருந்து விடுதலை பண்ணினபோது பாலும் தேனும் ஓடுகிற கானானுக்கு அழைத்து செல்வேன் என்றார். போகிறவழியில் செங்கடல் உண்டு, அதுபிளக்கப்படும் என்று சொல்லவில்லை, யோர்தான் பிளப்பு, எரிகோ தகர்ப்பு, எதையும் சொல்லவில்லை. ஆனாலும் இஸ்ரவேலர் மோசே, ஆரோன் சொல்லிய இந்த வார்த்தைகளை நம்பி விசுவாசித்தனர். (யாத்-4:30,31)

இஸ்ரவேலர் வனாந்திரத்தில் நடந்தபோது, தேவன் மேகஸ்தம்பத்தினாலும் அக்கிஸ்தம்பத்தினாலும் வழி நடத்தினார். அந்தந்த நாளுக்குரிய தேவைகளை சந்தித்தார். மன்னா காடை தண்ணீர் எல்லாம் கிடைத்தது பாத ரட்சையும் வஸ்திரமும் கூட பழமையாக போகவில்லை. இத்தனை அனுபவித்தும் தேவன் கூறிய வாக்குதத்தத்தை இதுவரை அனுபவிக்காத நிலையில் இருந்தனர்.

### இஸ்ரவேலருக்கு தேவன் கொடுத்த வாக்குதத்தம் என்ன?

யாத்-3:7,8 - பாலும் தேனும் ஓடுகிற கானான் தேசம் இதுவே வாக்குத்தத்தம். இப்போது யோர்தான் கரையை கடந்தால் வாக்குதத்த கானானுக்குள் பிரவேசிக்க முடியும். இது வரையும் தினமும் தேவன் நடத்தினார். ஆனால் இப்போது வாக்குத்தத்திற்குள் பிரவேசிக்க உங்களை பரிசுத்தம் பண்ணிக்கொள்ளுங்கள். நாளைக்கு கர்த்தர் உங்கள் நடுவிலே அற்புதங்களைச் செய்வார். (யோசுவா-3:5) என்றார்.

வாக்குத்தத்த அற்புதங்களை அனுபவிக்கிற நாம் நம்மை பரிசுத்தம் பண்ணிக் கொள்ளவேண்டும். பாவசேற்றிலிருந்து நம்மை தூக்கியெடுத்து நம் பாவங்களையெல்லாம் இயேசுவின் ரத்தத்தினால் கழுவினார். இது நாம் எகிப்திலிருந்து தேவன் வெளியே கொண்டுவந்த அனுபவம். அதற்கு இஸ்ரவேலரை உங்களை பரிசுத்தப்படுத்துங்கள் என்று சொல்லவில்லை. ஆனால் வாக்குத்தத்திற்குள் பிரவேசிக்க (நித்திய ஜீவனுக்குள் 1-யோவா-2:25) நாம் நம்மை பரிசுத்தம் பண்ணிக்கொள்ளவேண்டும்.

### 1. பரிசுத்தம் பண்ணிக்கொள்ள செய்ய வேண்டியது

1-யோவா-1:9 நம்முடையபாவங்களைநாம் அறிக்கையிட்டால் பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி சுத்திகரிப்பதற்கு அவர்

உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார். சங்கீ-32:5 தாவீது தன் அக்கிரமத்தை மறைக்காமல் என் பாவத்தை உமக்கு அறிவித்தேன் என்றார். பாவங்களை அறிக்கையிட்டவர் ஆனால் மீறுதல்களை அறிக்கையிடுவேன் என்றார். நமக்கு பாவங்கள் மன்னிக்கப்பட்டிருக்கலாம், தாவீதை போல மீறுதல்களை அறிக்கையிடாமல் இருக்கலாம். தாவீது பாவங்களை அறிக்கையிட்டு தேவனுக்கு முன்பாக செம்மையாய் வாழந்தவன், ஒருநாள் உப்பரிகையின் மீது உலாவும் போது மீறுதல் செய்தான். தேவ சமூகத்தை இழந்தான். ஆனபடியால் சங்கீ-51:3,4 என் மீறுதல்களை நான் அறிந்திருக்கிறேன். தேவரீர் ஒருவருக்கே விரோதமாக நான் பாவஞ்செய்து உமது கண்களுக்கு முன்பாக பொல்லாப்பானதை நடப்பித்தேன் என்று அறிக்கையிட்டான்.

## அறிக்கை என்பது சரியான நேரத்தில் செய்யப்படக்கூடிய ஒன்று

இஸ்ரவேலர் எரிகோ பட்டணத்தை எளிதாய் பிடித்தார்கள். ஆயி பட்டணத்தாரிடம் தோற்றார்கள். (யோசு-6,7 அதிகாரங்கள்) அதற்காக யோசுவா தேவனுடைய சமூகத்தில் காலை முதல் மாலை வரை அழுதான் (யோசு-7:6) அப்போது கர்த்தர் யோசுவாவிடம் இஸ்ரவேலர் பாவஞ்செய்தார்கள். சாபத்தீடானதில் எடுத்துக்கொண்டாலும் களவு செய்ததும் வஞ்சித்ததும் உண்டே என்றார். (யோசு-7:11) பின்பு யோசுவா (7:15,16,17) இஸ்ரவேலரை கோத்திரம் கோத்திரமாக வரப் பண்ணினான். வம்சமாக, பங்கு பங்காக, வீடு வீடாக கடைசியில் பேர் பேராக குறிக்கப்பட்ட போது (7:18) ஆகான் குறிக்கப்பட்டான். இப்போது (யோசு-7:20,21) நான் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு விரோதமாய் பாவம் செய்தேன். இன்னின்ன பிரகாரமாக செய்தேன் என்றான். இச்சித்தேன், எடுத்தேன், புதைத்தேன் என்றான். ஆனாலும் அது அவனுக்கு மன்னிப்பை கொண்டு வரவில்லை.

யோசு-7:25-ன் படி கல்லெறிந்து கொல்லப்பட்டான். பாவங்களை அறிக்கையிட்டான் ஆனால் முன்பே அவன் அறிக்கையிட்டிருந்தானானால் மன்னிக்கப்பட்டிருக்கலாம். ஜீவனுக்குள் பிரவேசித்திருக்க முடியும். இதுவே அனுக்கிரக காலம். இன்றே இரட்சன்ய நாள், பாவத்தை அறிக்கயைிட்டால் நம்மை மன்னிக்கிற காலம் இன்றே.

## 2. வசனத்தினாலே பரிசுத்தமாக்கும் ( யோவா-17:17 )

2-நாளா 29:15 எசேக்கியா ராஜா வசனத்திற் கேற்றபடி சுத்திகரிக்கப்பட வேண்டும் என்றான். பரிசுத்தத்தின் அளவு கோல் தேவ ஆலயமோ, தேவ ஊழியமோ, அல்ல அது வசனத்திற்கேற்றபடி இருக்க வேண்டும். 2-நாளா 34:19 யோசியா ராஜா நியாய பிரமாணத்தை வாசிக்க கேட்ட போது அதன்படி தன் வாழ்க்கை இல்லாததினால் வஸ்திரத்தை கிழித்துக்கொண்டு கத்தினான். ஆனபடியால் தேவன் (2-நாளா-34:27) என் முன் உன் இருதயம் இளகி உன்னை எனக்கு முன்பாக தாழ்த்தி அழுதபடியால் உன் விண்ணப்பத்தைக் கேட்டேன் என்றார்.

## 3. பரிசுத்த ஆவியினாலே பரிசுத்தமாக்கும் (ரோம-15:15)

யோவா-16:7,8 பரிசுத்த ஆவியானவர் பாவத்தை குறித்தும் நீதியைக்குறித்தும் நியாயதீர்ப்பைக் குறித்தும் கண்டித்து உணர்த்துவார். பரிசுத்த ஆவியானவரின் நடத்துதலுக்கு நம்மை ஒப்புக்கொடுக்கும்போது அவர் நம்மை சுத்திகரித்து நம்மை விடுவிக்கிறார். (2-கொரி-2:17,18) நாளுக்கு நாள் கர்த்தருடைய சாயலாக மகிமையின் மேல் மகிமையடைந்து மறுரூபமாக்கப் படுகிறோம்.

## 4. பரிசுத்தமாக்குதலை தேவ பயத்தோடே பூரணப்படுத்தக்கடவோம்(2-கொரி-7:1 )

மல்-3:16 கர்த்தருக்கு பயந்தவர்கள் ஒருவரோடு ஒருவர் பேசிக்கொள்வார்கள். கர்த்தர் கவனித்துக்கேட்பார். எல்லாவற்றையும் தேவன் தன் ஞாபக புஸ்தகத்தில் எழுதப்பண்ணுகிறார். தேவன் நாம் பேசுவதை கேட்கிறார் என்ற பயம் எப்போதும் வேண்டும். இது நம்மை பரிசுத்தமாய் வாழ வழி செய்கிறது. நாம் தேவனுடைய பிள்ளையாய் மாறினவுடன் மிகவும் முக்கியமானவர்களாகி விடுகிறோம். பாலலோகமும் நம்மை கவனமாய் பார்க்கும் அதே நேரத்தில் நம் மேல் குற்றம் சுமத்த சாத்தானும் பார்த்து கொண்டேயிருப்பான். ஆனபடியால் தேவ பயத்தோடே பரிசுத்தமாக்குதலை பூரணப்படுத்தக்கடவோம்.

## 5. தேவ பிரசன்னத்தினால் பரிசுத்தம் உண்டாகும்

யாத்-29:43 அங்கே இஸ்ரவேலரை சந்திப்பேன். அந்த ஸ்தலம் என்னுடைய மகிமையினால் பரிசுத்தமாக்கப்படும் . தேவன் நம்மை சந்திக்கிற இடத்தில் அவர் தம்முடைய மகிமையினால் நம்மை பரிசுத்தப்படுத்துகிறார். தேவ பிரசன்னத்தை எப்போதும் வாஞ்சிக்க வேண்டும்.

பிரியமானவர்களே, இப்படியாக நம்மை பரிசுத்தபடுத்தி கொள்ளும் போது அற்புதங்களை அனுபவிக்க முடியும். யாருக்கோ செய்தார், வேதத்தில் செய்தார் என்றல்ல, நமக்கு செய்கிறதை கண்டு அனுபவிக்க முடியும். அது மாத்திரமல்ல, நித்திய ஜீவனுக்குள் பிரவேசிப்பேன் என்ற நம்பிக்கையில் எப்போதும் மகிழ்ச்சியுடன் இருக்க முடியும். இப்படிப்பட்ட பரிசுத்தத்தை வாஞ்சிப்போம்.

கர்த்தருடைய கிருபை நம் அனைவரோடுங் கூட இருப்பதாக.

கர்த்தருடைய பணியில்,
**பாஸ்டர். ரவிச்சந்திரன்**
( சீயோன் மிசன் சர்ச் தஞ்சாவூர் )

## பாடுகளும், பரம அழைப்பும்

நான் இயேசுவை மிகவும் நேசிக்கிறேன். அவர் என்னுடன் தினமும் பேசுகிறார். இருப்பினும் எனக்கு ஏன் இந்த பாடுகள்? ஏன் இந்த வேதனை? ஏன் இந்த சோதனை? என்ற கேள்விகள் அநேகர் மனதில் உண்டு. ரோம-8:18-ல் வாசிக்கின்றோம். ஆதலால் இக்காலத்து பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்லவென்று எண்ணுகிறேன்.

தேவனின் அப்போஸ்தலனாகிய பவுல் தேவனால் வல்லமையாக பயன்படுத்தப்பட்ட பாத்திரம். ஒருபுறம் தேவன் வல்லமையான கிரியைகளை அவர் மூலமாக செய்து கொண்டிருந்தும் மறுபுறம் அவர் வாழ்வில் காவல், மரண அவதி, மிலாற்று, அடி மோசங்கள், வருத்தம், பசி, தாகம் என்னும் பாதை இருப்பினும் பாடுகளின் மத்தியில் அவர் தேவனுக்காக தொடர்ந்து ஓடுவதை பார்க்கின்றோம். அதைப் போல நம்முடைய கவலைகள், எண்ணங்கள் மேலானவைகளை நோக்கியே எப்போதும் இருக்க வேண்டும் என தேவன் விரும்புகிறார். காவலிலும் யாரிடம் என்னால் சுவிசேஷம் சொல்ல முடியும் மோசங்களிலும் மோசம் போக்கினவர்களுக்காக நான் எப்படி ஜெபிக்க முடியும். நம் வாழ்வில் வருத்தங்கள் சூழும் போதும் உலக கவலைகள் நம்மை நெருக்கும் போதும் அதை மேற் கொண்டு ஆத்தும பாரத்தால் தேவன் நம்மை நிரப்ப ஜெபிக்க வேண்டும் நம் பாடுகளின் மத்தியிலும் பரம அழைப்பின் பந்தய பொருளுக்காய் இலக்கை நோக்கி ஓட தேவன் உதவி செய்வாராக.

யோனா கீழ்ப்படியாமையினால் தண்டிக்கப்பட்டார். தாவீதும் ஒரு தருணத்தில் பாவம் செய்ததால் தண்டனை பெற்றதை எடுத்துக் கூறும் நம் வேதம் தேவனுக்கு பிரியமானதை செய்தபோது வந்த பாடுகளைப் பற்றியும் கூறுகின்றது. சாத்ராக், மேஷாக் ஆபேத்நேகோவிற்கு அக்கினியால் வந்த பாடு பாவத்தினால் உண்டானது அல்ல, தேவனுக்காக வைராக்கியமாக நின்றதினால் வந்தது. மோசேக்கும் இஸ்ரவேல் ஜனங்களுக்கும் செங்கடல் என்னும் தடை தேவனுக்குக் கீழ்ப்படிந்து ஆராதனை செய்ய முன் வந்ததால் வந்தது.

இப்படியாக தேவனுக்காக வாழும் வாழ்வாக உங்கள் வாழ்வு இருப்பினும் பாடுகளும் வரும், தேவன் என்னை நேசிக்கவில்லையா? என் மேல் அக்கறை இல்லையா? என எண்ண வேண்டாம். ஏனெனில் இக்காலத்து பாடுகள் இனி

நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்படத்தக்கவைகள் அல்ல. அதைதான் ஏசா 48:10-ல் வாசிக்கிறோம் "இதோ உன்னைப் புடமிட்டேன் ஆனாலும் வெள்ளியைப் போலல்ல, உபத்திரவத்தின் குகையிலே உன்னைத் தெரிந்து கொண்டேன்"

உபத்திரவத்தின் குகை கடினமான ஒன்றுதான் ஆனால் நாம் அதின் வழியாக செல்லும்போது புடமிடப்படுகிறோம். ஜெபத்தில் வளர்கிறோம், ஆராதனை ஆழமானதாக மாறுகின்றது, தாழ்மையை கற்றுக்கொள்கிறோம், கிருபையால் நிறப்படுகிறோம்.

தேவன் நம்மை உபத்திரவத்தின் குகையிலே தெரிந்து கொள்வாரென்றால் அவருடைய கண்கள் நம்மை பார்க்கும் அந்த நகழ்வை எண்ணி பாருங்கள் அப்போது உபத்திரவத்தின் குகை என்பது வேதனை அல்ல அது ஆசீர்வாதமே என்று அறிந்து கொள்ளலாம்.
எனவே நம்பிக்கையிலே சந்தோஷமாயிருங்கள் உபத்திரவத்திலே பொறுமையாயிருங்கள் ஜெபத்திலே உறுதியாய்த் தரித்திருங்கள். மேலானவைகளை நாடுங்கள், இனி வெளிப்படும் மகிமையை எண்ணி நமக்கு நியமிக்கப்பட்ட பாதையில் உற்சாகத்துடன் தேவ பெலத்துடன் தொடர்ந்து செயல்படுவோம். கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பாராக.

வாலிபம் இயேசுவுக்கே..

**கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர சகோதரிகளுக்கு !**

இந்திய தேச மிஷனரிகளை தாங்கும் ஊழியத்திற்கான, தங்களது காணிக்கைகளை சகோ.கிறிஸ்டோபர் அவர்களிடத்திலும்.

திக்கற்ற பிள்ளைகளின் ஊழியத்திற்கான, தங்களது காணிக்கைகளை சகோ.பிராங்ளின் அவர்களிடத்திலும்.

வாகன ஊழியத்திற்கான, தங்களது காணிக்கைகளை சகோ.கிரண் அவர்களிடத்திலும்,

ஆலய கட்டுமான ஊழியத்திற்கான, தங்களது காணிக்கைகளை சகோ.ஜெகநாதன் அவர்களிடத்திலும்,

கொடுத்து ஊழியத்தை தாங்குமாறு கேட்டு கொள்கிறோம்.

**நன்றி**

# இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

" உன் பேரை பெருமைப்படுத்துவேன்
நீ ஆசீர்வாதமாய் இருப்பாய் " ( ஆதி–12:2 )

Sis. மரிய குளோரி தாஸ்
Sis. தேவ கிருபை
Sis. கேத்ரீனா சுகன்யா
Sis. ஆனந்தி சாலமன்
சகோ. ஸ்டீபன். T
செல்வி. ஹெலன் கிறிஸ்டோபர் தேவராஜ்
சகோ.ஜெரேமியா
செல்வி. அன்னாள் ஆசீர்வாதம்
சகோ. ஜோன்ஸ் செல்வா சிங்
செல்வி. ஏஞ்சலின் ஜெகநாதன்
செல்வன். அஜாரியா பிரவீன் குமார்
Sis. எலிசபெத் ஸ்டாலின்
செல்வி. அனாஸ்டினா கமலதாசன்
செல்வி. சித்ரா ராஜன்
Sis.ஹெலன் ஷீஜா ராபின்ராஜ்
செல்வன். பால் சாமுவேல் தாமஸ்
செல்வன். இவான்ஸ் ஸ்டெர்லின்
சகோ. எபிநேசர்
செல்வன்.ஜாஸ்வா ஷாஜின் ஹெக்கில்
செல்வன். டோனி ராமமூர்த்தி
சகோ. ஜோன்ஸ் ராஜ்
சகோ.கலியமூர்த்தி
செல்வன். மில்டன் பக்தராஜ்
செல்வன். நெல்சன் கண்ணன்

சகோ. பால முருகன்
செல்வி. ரீமா ரோஸ் எபெநேசர்
சகோ. சாமுவேல் தாசையா
Sis. தங்க மெல்பா தாசையா
செல்வி. எவாஞ்சலின் சரோன் சாமுவேல்
செல்வன். எபின் பிரைஸ் கிறிஸ்டோபர்
சகோ. தர்மர்
சகோ. ராஜவேல்
செல்வி. மீனா குமாரி சுகுமார்
சகோ. ஜோஸ் யோசுவா
Sis. குமுதினி வில்சன்
செல்வன். ஏபெல் ராஜ் எபிநேசர்
செல்வி. மெர்ஸி தெபோரா ஆமோஸ்
சகோ. ஆண்டனி சாமி
சகோ. பிரிட்ஸ்லின் ஜாக்சன்
சகோ. விஜயன்
சகோ. ஞான சேகர்
Sis. எஸ்தர் சாம் சுந்தர்
செல்வி. ஜோயல் ஹெக்கில்
Sis. சுகந்தி தம்புகுமார்
சகோ. ஆசீர்வாதம்
Sis. லதா சுஜின் ஹெக்கில்
Sis. அருள் நான்சி பிராங்ளின்
சகோ. வடிவேலு
செல்வன். கதிரவன் சுகுமார்

# இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

கர்த்தர் உனக்கும் உன் இளவயதின் மனைவிக்கும்
சாட்சியாயிருக்கிறார் (மல்கியா 2:14)

திருமதி /திரு. பெபிட் செல்பின்
திருமதி / திரு. எபிநேசர்
திருமதி / திரு. சுஜின் ஹெக்கில்
திருமதி / திரு. ஸ்டாலின்
திருமதி / திரு. வில்சன்
திருமதி / திரு. எட்வின் சாம் ஞானதுரை
திருமதி / திரு. கிரன் குமார்

திருமதி / திரு. தாமஸ்
திருமதி / திரு. சுபின் சிங்
திருமதி / திரு. ஜோன்ஸ் ராஜ்
திருமதி / திரு. ஜான் போஸ்கோ
திருமதி / திரு.ஆல்வின் ஜுலியஸ்
திருமதி / திரு. எட்வர்ட் சந்தோஷ்
திருமதி திரு. M. கிருஸ்டோபர்
திருமதி / திரு. வினீஷ்

# 2024 – மே மாத நிகழ்ச்சி நிரல்

## ஞாயிறு ஆராதனை மாலை 5:00 முதல் 6:30 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 05/5/2024 | சகோ.சுபின் சிங் | சகோ.ஸ்டாலின் |
| 12/5/2024 | சகோ. ஜான் போஸ்கோ | சகோ.சுகுமார் |
| 19/5/2024 | சகோ.பிராங்ளின் | சகோ. சாம் ஆனந்த் |
| 26/5/2024 | சகோ. பக்த ராஜ் | சகோ. தாமஸ் |

## வெள்ளி ஆராதனை மாலை 4:00 முதல் 6:00 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 03/05/2024 | சகோ.M.கிறிஸ்டோபர் | சகோ.அருண் இம்மானுவேல் |
| 10/05/2024 | தாய்மார்கள் தின ஆராதனை | |
| 17/05/2024 | உபவாச திருவிருந்து ஆராதனை | |
| 24/05/2024 | சகோ. பிரசாத் | சகோ. ஆண்டனி |
| 31/05/2024 | சகோ. ஏசு ரத்தினம் | சகோ.கிறிஸ்டோபர்தேவராஜ் |

## ஆராதனை ஒழுங்குகள்

09/5/2024 அன்று முழு இரவு ஜெப ஆராதணை
இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு
நேரம்– இரவு 10:00 முதல் அதிகாலை 1:00 மணி வரை

18/5/2024 அன்று சகோதரிகள் ஐக்கிய கூடுகை
இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு
நேரம் – மாலை 6:30 முதல் இரவு 8:00 மணி வரை
வேத வினா பகுதி – பிலிப்பியர்

24/5/2024 அன்று வாலிபர் ஐக்கிய கூடுகை
இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு
நேரம் – மாலை 6:30 முதல் இரவு 8:00 மணி வரை
வேத வினா பகுதி – ஏசாயா – 1 முதல் 33 அதிகாரங்கள் வரை

### சனிக்கிழமை
சிறுவர் வேதாகம பள்ளி
இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு
நேரம் – மாலை 3:30 முதல் 5:15 வரை

### திங்கட்கிழமை
பெண்கள் ஐக்கிய ஜெப கூடுகை
இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு
நேரம் – மாலை 5:30 முதல் 6:30 வரை

### செவ்வாய்கிழமை
குடும்ப ஆசீர்வாத ஜெப கூடுகை
இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு
நேரம் – மாலை 6:30 முதல் 8:00 வரை

### வியாழக்கிழமை
பாடல் பயிற்சி கூடுகை
இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு
நேரம் – மாலை 6:30 முதல் 8:00 வரை

# 2024 மே மாதத்திற்கான வேத வினா!

**கீழ் கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை வசனம் மற்றும் அதிகாரத்துடன் குறிப்பிடவேண்டும்**



1. உள்ளங்கால் தொடங்கி உச்சந்தலைமட்டும் ஒரு பழுதில்லாமல் சவுந்தரியமுள்ளவனாயிருந்தவன் யார்?
2. வெகு சவுந்தரியவதியாயிருந்த ஒரு ஸ்திரீ யார்?
3. இஸ்ரவேல் மனுஷருடைய இருதயத்தை கவர்ந்து கொண்ட மனுஷன் யார்?
4. ராஜாவிடம் என் வேலைக்காரன் என்னை மோசம் போக்கினான் என்ற மனுஷன் யார்?
5. அம்மோனின் சிநேகிதன் அவன் மகா தந்திரவாதி அவன் யார்?
6. மூன்று வல்லயங்களினால் நெஞ்சில் குத்தப்பட்டு பத்துபேர் சூழ்ந்து அடித்து கொல்லப்பட்டவன் யார்?
7. பழைய ஏற்பாட்டில் நான்று கொண்டு செத்தவன் யார்?
8. தன் ஊரிலே மரித்து, தன் தாய்தகப்பன் மார் கல்லறையில் அடக்கம்பண்ணப்பட விரும்பினவன் யார்?
9. அழுது உபவாசித்து ஜெபித்தான் தந்தை குழந்தை மரித்த உடனே குளித்து புசித்தான் விந்தை! இவன் யார்?
10. எகிப்தியன் கையில் இருந்த ஈட்டியை பறித்து அவன் ஈட்டியினாலே அவனை கொன்று போட்டவன் யார்?
11. நான் ஒரு நாய்தலையா என்றவன் யார்?
12. மூன்று சிங்கங்களை கொன்ற பராக்கிரமசாலி யார்?
13. நீ எவ்விடத்தான் என்று கேட்டது யார்?
14. செய்கையில் வல்லவன் யார்?
15. அப்சலோமின் சகோதரியின் பெயர் என்ன?

**விடைகளை வருகின்ற 20-05-2024 க்குள்**
**(WhatsApp #+91 8940523562) என்ற எண்ணுக்கு பெயருடன் குறிப்பிட்டு அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். வேதாகமத்தில்**
**“ II சாமுவேல் ”**
**அதிகாரங்களில் இருந்து பதிலை கண்டுபிடிக்கவும்.**

**...தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; –மத்தேயு 7:7**

# 2024 - ஏப்ரல் மாத வேத வினாவுக்கு விடை

1. சவுல் I சாமு 24:17
2. தாவீது I சாமு 25:21
3. பெலிஸ்தர் I சாமு 31:9
4. கோலியாத் I சாமு 17:51
5. அபிகாயில் I சாமு 25:25
6. பாறைகள் I சாமு 14:4,5
7. சாமுவேல் I சாமு 2:18,19
8. சவுல் I சாமு 15:30 ,26:21
9. சாமுவேல் I சாமு 12:23
10. சவுல் I சாமு 26:21
11. தாவீது I சாமு–17:34–36
12. தோவேக்கு I சாமு–22:12–18
13. கோலியாத் I சாமு–17:4,5
14. நானூறு பேர் I சாமு–30:17
15. இஸ்ரவேலர் I சாமு–7:5,6

## 2024- ஏப்ரல் மாத வேத வினாவுக்கு பதில் எழுதியவர்கள்

SIS. சுகந்தி தம்பு குமார்
SIS. ஜீனா சதீஸ்குமார்
SIS. பியூலா மெர்சி பால்
SIS. ஜெஸ்லட் வர்க்கீஷ்
SIS. ஷீபா அருண்
SIS. சாந்தி
SIS. பத்மினி வர்க்கீஸ்

## நீங்களே எனக்கு சாட்சிகள்

கர்த்தருடைய பரிசுத்த நாமம் மகிமைபடுவதாக. இந்த மே மாத இதழின் மூலம் உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

ஏசயா-43:12- "நானே அறிவித்து இரட்சித்து விளங்கப் பண்ணினேன். உங்களில் இப்படிச் செய்யத்தக்க அந்நிய தேவன் இல்லை நானே தேவன் என்பதற்கு நீங்கள் எனக்கு சாட்சிகள் என்று கர்த்தர் சொல்லுகிறார் "என்ற வசனத்தை அடிப்படையாக கொண்டு நாம் வேதத்தில் இருந்து தியானிக்கலாம். பிரியமானவர்களே ஆண்டவர் சொல்லுகிறார், நானே தேவன் என்பதற்கு நீங்களே எனக்கு சாட்சிகள் you are my witness கர்த்தரே தேவன் என்பதற்கு, அவர் நாம மகிமைக்கென்று இந்த பூமியிலே தேவன் நம்மை சாட்சிகளாய் வைத்திருக்கிறார்.

1-பேது 2:9-ல் "நீங்களோ உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியாயும் ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும் பரிசுத்த ஜாதியாயும் அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்" என்று ஆண்டவர் சொல்லுகிறார். நம்மை பார்த்து ராஜரீகமான கூட்டம் என்றும் பரிசுத்த ஜாதி என்றும் சொல்லுகிறார், மற்றவர்கள் எல்லாம் சாதாரனமான ஜனங்கள். நானும் நீங்களும் தேவனுடைய பரிசுத்தமான ஜனம், மற்றவர்கள் எல்லோரும் எனக்கு சாதாரணமானவர்கள். நாமும் தேவனைப் பார்த்து நீங்க எனக்கு special heart எப்போதுமே நீங்க எனக்கு special ஆண்டவரே என்று தேவனுக்கு முக்கியத்துவம் கொடுப்போம். நீங்கள் தேவ சமூகத்தின் அப்பம், உங்களையும் என்னையும் தேவன் பிரித்து எடுத்து வைத்திருக்கிறார். ஒரே ஜாதியாக பரிசுத்த ஜாதியாக.

அப்-23:10-11-ல் மிகுந்த கலகம் உண்டானபோது பவுல் அவர்களால் பீறுண்டு போவானென்று சேனாதிபதி பயந்து போர்ச்சேவகர் போய் அவனை அவர்கள் நடுவிலிருந்து இழுத்துக் கோட்டைக்குக் கொண்டு போகும்படி கட்டளையிட்டான்.

பிரியமானவர்களே, நம்முடைய வாழ்க்கையில் எத்தனை முறை பீறுன்டு போயிருப்போம், அவ்வளவுதான் முடிந்தது என்று நினைத்திருப்போம், ஆனால் நம்முடைய ஆண்டவரின் காருண்யத்தால் மீட்க்கப்பட்டு சாட்சியாக வைத்திருக்கிறார்.

யோவா-15:27-ல் நீங்களும் ஆதிமுதல் என்னுடனேகூட இருந்தபடியால் எனக்கு சாட்சிகளாயிருப்பீர்கள். இயேசு கிறிஸ்து இந்த

பூமியிலே 33 1/2 வருடம் வாழ்ந்தார், 3 1/2 வருடம் முழுமையாக ஊழியம் செய்தார். இந்த உலகத்தில் இயேசு கிறிஸ்து சந்தித்த மனிதர்கள் ஆயிரக்கணக்கான ஜனங்கள் என்று வேதத்தில் பார்க்கிறோம். அவர்கள் எல்லோரையும் பார்த்து நீங்கள் எனக்கு சாட்சிகளாய் இருப்பீர்கள் என்று சொல்லாமல் ஆதிமுதல் இருந்த பேதுருவையும், யோவானையும் பார்த்து நீங்கள் எனக்கு சாட்சிகளாய் இருப்பீர்கள் என்று சொன்னார். ஆரம்பம் என்றால் அவர் நம்மை பிரித்து எடுத்து எடுக்கப்பட்ட நாள் நாம் இரட்சிக்கப்பட்ட நாள்முதல் என்று அர்த்தம், உண்மையிலேயே நாம் இரட்சிக்கப்பட்ட நாளிலிருந்து ஆண்டவருக்கு உண்மையாக இருக்கிறமோ? இல்லை மாய்மாலமாக இருக்கிறமோ? சபையில் ஒரு மாதிரி வெளியிலே ஒரு மாதிரி இருக்கிறமோ?

நம்மை நாமே ஆராய்ந்து தேவனுக்கு நாம் சாட்சிகளாய் இருப்போம். நம் முழு இருதயத்தை தேவனுக்கு ஒப்புக்கொடுப்போம், தேவனுக்காக மரண பரியந்தம் சாட்சிகளாக இருப்போம்.

கர்த்தருடைய கிருபை நம் அனைவரோடுங் கூட இருப்பதாக ஆமென்.

இப்படிக்கு
உங்கள் அன்பு சகோதரி.
விஜயா ஆண்டனி

**யாத்திராகமம் ஒரு பார்வை**

அதிகாரங்கள் 40
வசனங்கள் – 1213

**முக்கிய கதாபாத்திரங்கள்**

மோசே, ஆரோன், மிரியாம், பார்வோன்,
யோசுவா, பெசலியேல், அகோலியாப்.

**முக்கியமான இடங்கள்**

எகிப்து,கோசேன், செங்கடல்,சினாய்மலை,
சீன் வனாந்திரம், மாரா, ஏலிம், ரெவிதீம்.

**பத்து வாதைகள்**

அதிகாரங்கள் 7,8,9,10,11.

1 நதியின் தண்ணீர் இரத்தமாக மாறுதல்
2 தவளைகள் 3. பேன்கள்
4. வண்டுகள், 5.மிருகஜீவன் கொள்ளை நோய்.
6. கொப்புளங்கள் 7. கல்மழை
8. வெட்டுக்கிளி 9. காரிருள்
10. தலைபிள்ளை மிருக ஜீவன்கள் தலையீற்று சங்காரம்

# அறிவிப்பு பலகைகள் (Notice Boards)

நமது அன்றாட வாழ்க்கையில் நம்மை எச்சரிக்கவும். நமக்கு வழிகாட்டவும் அநேகம் அறிவிப்பு பலகைகள் தெருக்களிலும் கடைகளிலும் வீடுகளிலும் அலுவலகங்களிலும் வைக்கப்பட்டுள்ளன. அவற்றை நமது கிறிஸ்தவ வாழ்க்கையோடு ஒப்பிடக் கூடிய சிலவற்றை இங்கே கவனிப்போம்.

## 1. நல்வரவு (Welcome)

(1) வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் (மத்.11:28)
(2) எல்லாம் ஆயத்தமாயிருக்கிறது. கலியாணத்திற்கு வாருங்கள் (மத்.22:4, லூக்.15:28)
(3) கர்த்தரால் ஆசீர்வதிக்கப்படவரே,
உள்ளே வாரும் நீர் வெளியே நிற்பானேன் (ஆதி.24:31).

## 2. இங்கே நடக்கக் கூடாது (Don´t walk here)

(1) துன்மார்க்கருடைய ஆலோசனையின்படி நடவாதே (சங்.1:1)
(2) மாம்சத்தின்படி நடவாதே (ரோ.8:1,4,5,– 2.பேது.2:7,10)
(3) ஒழுங்கற்று நடவாதே (2.தெச.3:6, 2.கொரி.4:2, எபேசி.4:17, 5:15


## 3. அபாயம் (Danger)

(1) பாவத்தின் சம்பளம் மரணம் (ரோ.6:23)
(2) பாவம் செய்கிற ஆத்துமாவே சாகும் (எசேக்.18:4,18)
(3) உங்கள் பாவம் உங்களைத் தொடர்ந்து பிடிக்கும் (எண்.32:23)

## 4. சாப்பாடு தயார் (Meals Ready)

(1) ஜீவ அப்பம் நானே, என் மாம்சத்தைப் புசித்து என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு.
(யோ.6:48,54 –56, 1.கொரி.11:26, 10:16–17)
(2) என் தகப்பனுடைய கூலிக்காரர் எத்தனையோ பேருக்கு பூர்த்தியான சாப்பாடு
இருக்கிறது. நானோ பசியினால் சாகிறேன் (லூக்.15:17, ஆதி.25:34)
(3) கர்த்தருடைய சமுகத்தில் வாசமாயிருக்கிறவர்கள்
திருப்தியாகச் சாப்பிடவும் நல்ல வஸ்திரங்களைத் தரிக்கவும் அதின் வியாபாரம் அவர்களைச் சேரும் (ஏசா.23:18, (1.இராஜா.17:1–6)

# Kids Corner










Jeenu

3 ஆந்த வார்த்தை மாம்சமாகி கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய் நமக்குள்ளே வாசம் பண்ணினார். அவருடைய மகிமையைக் கண்டோம். அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது. (யோவா–1:1,14) ஆதியிலே தேவன் வார்த்தையினாலே உலகத்தையும் அண்ட சராசரங்களையும் உண்டாக்கினார். ஆதி–1 அதிகாரம். இரத்தத்தில் தோய்க்கப்பட்ட வஸ்திரத்தை தரித்திருந்தார். அவருடைய நாமம் தேவனுடைய வார்த்தை என்பதே. (வெளி–13:13)

நம்முடைய தேவன் நல்ல வார்த்தையாக இருக்கிறார். ஆகவே நாமும் பேசுகின்றபொழுது சமாதானமும் கிருபையும் நிறைந்த வார்த்தைகளையே உபயோகிக்க வேண்டும். யாக்கோபு சொல்கிறார் " துதித்தலும், சபித்தலும் ஒரே வாயிலிருந்து புறப்படக்கூடாது. ஒரே ஊற்றுக்கண்ணிலிருந்து தித்திப்பும் கசப்புமான தண்ணீர் சுரக்குமா? அத்திமரம் ஒலிவப்பழங்களையும், திராட்சை செடி அத்திப்பழங்களை கொடுக்குமா? அப்படியே உவர்ப்பான நீர் ஊறுற்று தித்திப்பான ஜலத்தை கொடுக்கமாட்டாது. (யாக்–3:10–12) அப்படி நல்ல வார்த்தைகளை பேசுகின்றபொழுது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை நாம் அறிக்கையிடுகிறோம். அதுவே தேவன் அருளும் பரிசுத்த ஆவியின் கிரியை. இப்படி நல்ல வார்த்தைகளை பேசுவதின் மூலம் இயேசு கிறிஸ்துவை நம்முடைய சரீரத்திலே மகிமைப்படுத்துகிறோம்.

## 2.செயலின் மூலம்...

ஒரு சகோதரனாவது, சகோதரியாவது வஸ்திரமில்லாமலும், அநுதின ஆகாரமில்லாமலும் இருக்கும் போது உங்களில் ஒருவன் அவர்களை நோக்கி நீங்கள் சமாதானத்தோடே போங்கள், குளிர்காய்ந்து பசியாறுங்கள் என்று சொல்லியும் சரீரத்திற்கு வேண்டியவைகளில் அவர்களுக்கு கொடாவிட்டால் பிரயோஜனமென்ன? விசுவாசமானது கிரியைகள் இல்லாதிருந்தால் தன்னிலேதானே செத்ததாயிருக்கும்"(யாக்–2:15–17)

ஆகவே பிரியமானவர்களே நற்செயல்கள் மூலம் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை நாம் அறிக்கை செய்ய வேண்டும். நம்மால் முடிந்த அளவுக்கு தேவையோடிருக்கும் ஜனங்களுக்கு உதவி செய்ய வேண்டும். இயேசு கிறிஸ்துவும் கூட பரலோகத்தில் சிங்காசனத்தில் வீற்றிராமல் மனிதனாக உலகத்திற்கு இறங்கி வந்து இருளில் வாழ்ந்த ஜனங்களுக்கு வெளிச்சத்தை கொடுத்தார். கட்டுகளோடு போராடிக்கொண்டிருந்த மக்களுக்கு விடுதலை கொடுத்தார். ஆறுதல் இல்லாமல் தவித்த மக்களை சந்தித்து அவர்களின் கண்ணீரை துடைத்தார்.

நாமும் கூட நம்மால் ஆன உதவிகளை பிற சகோதரர்களுக்கு செய்கின்றபொழுது அந்த உன்னதமான தேவனை இந்த உலகத்திற்கு அறிவிக்கிறோம். இதுவே தேவன் நமக்கு அருளின பரிசுத்த ஆவியினுடைய அடையாளம்.

# TRUST IN GOD

Once lived a great king named Sargon. He was a powerful king. But he was growing older and he did not have a son. So he asked his ministers for a solution. One of them said, "There is a sorcerer who lives in the forest and may be he can help you." So the king with two of his soldiers went to the forest to see him. When the king met him, the king told his problem to the sorcerer. The sorcerer gave a solution. He said that if the king kills a boy of about 10 to 13 years, he can get a son.

So the king announced in his country that, "Whoever wants to give your son, I will give you 1 crore rupees." After a month of waiting, a family came to the king and told, "You can take this boy and give us 1 crore rupees." The king asked them "why don't you want this boy?" The family told the king that he does unnecessary work that every time he prays and goes to church so we don't want him. So the king said "Ok make preparation for the boy to be killed." At the day of executing the boy, the king asked the boy his final wish. The boy told he wanted to play with sand. The king prepared a sand ground for him to play. After 5mins, he built 3 sand castles. The first two he destroyed by stamping and he left the third one untouched. The king was confused and before executing the boy he asked why he left the 3rd sand castle untouched. The boy told the king that those sand castles were the trust he had kept with different people. 1st was his family they abandoned him so he destroyed. 2nd was his king who has to protect everybody but you are going to kill me and the 3rd is the trust with God. I know God will save me he said.

The king Sargon thought for a minute that if he kills this boy then he has to wait for his son to be born and then grew and by that time the king would die. So he made the boy the next king because he has trust in God. So the boy became the king and ruled the kingdom with the trust of God.
Moral: Psalms 25: 1 – In you I trust, O my God. Do not let me be put to shame, nor let my enemies triumph over me.

**In Chirst,**
**Jerald Jestine**

# கடந்த மாத நிகழ்வுகளில் உங்கள் பார்வைக்கு சில





















# ஊழியர்களுக்காக ஜெபியுங்கள்

## செயற்குழு உறுப்பினர்கள்

**முதன்மை ஊழியர் : சகோ. S.ஸ்டாலின்**
Ph.66021072 - 96760452

**செயலாளர் : சகோ. S.சுகுமார்**
Ph.99837646

**பொருளாளர் : சகோ.S.சிவ குமார்**
Ph.97224276

**பெண்கள் ஐக்கிய தலைவி: சகோதரி. செலின் டேவிட்**
Ph.65967170 - 99368775

**வாலிப ஐக்கிய தலைவர் : சகோ.சுபின் சிங்**
Ph.65197164-65772762

Follow us Social Media Youtube & Facebook - ATC TAMIL

Church 'E' mail ID - ahmaditamil.kw@hotmail.com

Church Website Address - ahmaditamilchurch.com

தங்களது ஜெப விண்ணப்பங்கள்
எதுவாக இருந்தாலும்
எங்களுக்கு தெரிவிக்கவும்
உங்களுக்காக ஜெபிக்க
ஒரு குழு ஆயத்தமாய் இருக்கிறது.

**Church Postel Address**
Your name,,
Po. Box No : 46795.
Fahaheel,64018, Kuwait.

Private Circulation only